தமிழ்ச் சிட்டு

A:100

துணிவு, ஊக்கம்
கடமைதாம் நிலைப்பன!

பொய்யான செயல்கள்,
புளுகிடும் உரைகள்
பொருளுக்கே அலைந்திடும் நெஞ்சுகள்,

மெய்யேதும் இல்லாத
மேனி மினுக்குகள்,
மேன்மையாம் இவையெனப் பேச்சுகள்,

வெய்யவாம் கொடுமைகள்
மேன்மேலும் வளர்ந்தன!
மேலோட்ட வாழ்க்கையே போதுமாம்!

தொய்யவும் வேண்டா; [redacted]
துவளவும் வேண்டா;
துணிவு, ஊக்கம், கடமைதாம் நிலைப்பன!

— 1992

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

குரல் : 22
இசை : 1

விலை :
உருபா : 1-50

தெரிந்து கொள்ளுங்கள்

- அறிவியல் வரலாற்றில் 19-ஆம் நூற்றுண்டு (1801 முதல் 1900 வரையுள்ள ஆண்டுகள்) மிகவும் முகாமையானவை-யாகும். ஏனெனில் அவ்வாண்டுகளில்தாம் மருத்துவம், பொறியியல், இயல்பியல், வேதியல் முதலிய துறைகளில் மிக வியத்தகு புதிய கண்டு பிடிப்புகளும், புதுப் புனைவு-களும் நிகழ்ந்தன.

  புதிர்க் கதிர் (X-Ray), ஒளிவேகம், புகைப்படம், திரைப்-படம், தொலைபேசி, பெனிசிலின், வானூர்தி, வானொலி முதலிய அரிய பயனுள்ள கண்டு பிடிப்புகள் நிகழ்ந்து, உலகமே ஒரு பெரிய அறிவியல் நாகரிகத்தைப் பெற்றது 19-ஆம் நூற்றுண்டில்தான்!

- சென்னையில் உள்ள கோடம்பாக்கம் என்பது இப்பொழுது திரைப்படக்காரர்கள் நிறைந்திருக்கிற பகுதியாக உள்ளது பெரும்பாலர்க்குத் தெரியும். இஃது முன்னாளைய ஆர்க்காடு நவாப் காலத்தில் குதிரைகள் லாயம் இருந்த பகுதி. அது கோடா பாக் (குதிரைகள் இருப்பிடம்) என்று அழைக்கப்-பெற்றது. 'கோடாபாக்' என்னும் இந்திப் பெயரே இப்-பொழுது கோடம் பாக்கம் என்று வழங்குகிறது.

- அதேபோல் பெரிய வில்வமரம் இருந்த சென்னையின் இன்னொரு பகுதி மகா பலவ க்ஷேத்திரம் என்று முன்னர் அழைக்கப்பெற்று, அது காலப்போக்கில் மகாபில்வம்— மாபில்வம் — மாபல்வம் —மாம்பலம் என்று இக்கால் வழங்குகிறது.

- தமிழகத்தில் 22,000 ஞாய விலைக்கடைகள் இருக்கின்றன.

- இந்தியாவில் 19,200 கோடி கல்லெடை (டன்) நிலக்கரி வளம் இருப்பதாக மதிப்பிடப் பெற்றுள்ளது. இ'து உலக நிலக்கரி வளத்தில் ஒரு விழுக்காடு ஆகும்.

- உலக அளவில் பட்டுத்துணி உருவாக்கத்திலும் தரத்திலும் சீனாதான் முதலிடம் பெறுகிறது.

- கோழிக்கறியைத் தென்னிந்தியர்களை விட, வடஇந்தியர்-களே மிக விரும்பிச் சாப்பிடுகிறார்களாம்!

- எமனின் கணக்காளன் என்று புராணங்கள் கூறும் சித்திர-குப்தன் என்பவனுக்குத் தமிழகத்தில் காஞ்சிபுரத்தில் மட்டுமே கோயில் உண்டு, வேறெங்கும் அவனுக்குக் கோயில் இல்லையென்று சொல்லப் பெறுகிறது.

- தமிழகத்தில் 12,616 ஊராட்சி மன்றங்களும், 387 ஊராட்சி ஒன்றியங்களும், 99 நகராட்சிகளும் உள்ளன. இவையன்றிச் சென்னை, கோவை, மதுரை ஆகிய மூன்று மாநகராட்சி-களும் உள்ளன.

- அண்மையில் சமண மதத்தை உருவாக்கிய மகாவீரரின் 2591-ஆம் பிறந்த நாள் விழா கொண்டாடப் பெற்றது.

- பழம் பெரும் திரைப்படப் பாடகர்கள் எம். கே. தியாக-ராச பாடகர், பி. யு. சின்னப்பா இருவருக்கும் கர்நாடக இசைப் பயிற்சி கொடுத்தவர், சூலமங்கலம் உடன்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்கு நல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்- 22] (தி.பி. 2023) மடங்கல் (ஆக-செப்: 92) [இசை-1

வரலாறு மறைக்கப்படுகிறது! தமிழ் இளைஞர்கள் விழிப்பாக இருக்க வேண்டும்-4

மொழி நிலையில் அவர்கள் சமசுக்கிருதத்தையே தாய்மொழியாகக் கருதுகின்றனர்; அஃதாவது தந்தை மொழியாகக் கருதுகின்றனர். தமிழர்களாகிய நாம் தாய்மொழிக் கொள்கை கொண்டவர்கள். அஃதாவது தாய் வழி மரபினர். நாம் பேசும் மொழி, வாழும் நிலம், நம் குடும்ப அமைப்பு, சொத்துரிமை அனைத்திற்கும் தாயையே முதன்மையாக வைத்துப் போற்றும் கொள்கையை உடையவர்கள். தமிழ் நமக்குத் தாய்மொழி; நாம் வாழும் தமிழகம் நமக்குத் தாய்நாடு; நம் குடும்பத்திற்குத் தலைமை தாங்குவதும் தாயே! அவளுக்குத்தான் அனைத்துப் பெருமைகளையும், உரிமைகளையும் கொடுத்தனர் தமிழர்கள். சொத்துக்கும் அவள்தான் உரியவள்: சொத்துரிமைக்குத் தாயம் என்று பெயர். ஆனால் ஆரியர்கள் இந்த நாட்டிற்கு வந்த பின்னர் தாய்வழிக் குமுகாயமாக இருந்த தமிழர்கள் தந்தை வழி மரபினராக மாற்றப்பட்டனர்;

மக்களினத்தின் தொன்மூதாதையர் தாய்வழி மரபினரே! தமிழர் உலக இனங்களில் மிகவும் தொன்மை வாய்ந்த இனத்தினர்; அவர்கள் தாய்வழிக் குமுகத்தினர் என்பதே அவர்களின்

தொல் பழமையைக் காட்டும். ஆனால், ஆரியர் தமிழரினும் மிகப் பிந்திய குமுகாயத்தினராதலின், அவர்களின் இன நாகரிக மேம்பாட்டுக் காலத்தின் குடும்ப அமைப்பின்படி அவர்கள் தந்தை வழி மரபினராக ஆயினர். அவர்களது இன மேம்பாட்டுக்காலத்தில் அவர்களின் குடும்ப அமைப்புக்குத் தலைவன் ஆணாகவே.—தந்தையாகவே—இருந்தான். எனவே, அவர்களின் மொழி தந்தை மொழி (Father Language) ஆகவும், (நன்றாக நினைவில் கொள்ளவும்; அவர்கள் தங்கள் மொழியைத் தாய் மொழி என்று கூறுவதில்லை.) நாடு, தந்தை நாடு (Father Land) ஆகவும் ஆயின. அவர்களுக்குச் சொத்துரிமையும் தந்தைவழிப் பட்டதாகவே இருந்தது.

பாரதியார் ஆரிய வழியினர்—ஆரியப் பார்ப்பனர்—ஆகையால், அவரின் செந்தமிழ்நாடு என்னும் பாட்டில் கூட,

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே!—எங்கள்
'தந்தையர் நாடு' என்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே!"

— என்று தம் இனத்தின் மரபை மறக்காமல் பாடுகிறார். தமிழை அவர் மிகுதியாக மதித்தாலும், இன மேம்பாடு பற்றிச் சிந்திக்கையில், அவரின் பாடல்கள் நெடுகிலும், அவர் ஆரிய இனம் என்பதை மறவாமல், மிக்க கவனத்துடன், குறித்ததுமன்றி, அதற்காகப் பெருமைப்பட்டும் கொள்கிறார்.

இனி, இன்னொரு குடும்ப வழக்கத்தையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டியிருக்கிறது; அது மணக்கொடை பற்றிய ஒரு மரபு வழக்கமாகும். திருமண அமைப்பு என்பது உலகில் உள்ள பல்வேறு இனங்களுக்கும் பொதுவான ஓர் அமைப்பாக இருப்பினும், அதன் முறைகள் வேறு வேறாக இருக்கின்றன. அவற்றுள் மணமகன் வீட்டார் அல்லது மணமகன், அவன் மணந்து கொள்ளப் போகும் மணமகள் வீட்டாருக்கு அல்லது மணமகளுக்கு அன்பளிப்புத் தருவதும், அதேபோல் மணமகள் வீட்டார் அல்லது மணமகள், அவள் மணந்து கொள்ளப் போகும் மணமகன் வீட்டாருக்கு அல்லது மணமகனுக்கு அன்பளிப்புத் தருவதும் ஆன வழக்கமும் ஒன்று. இந்த அன்பளிப்புகள் சில இனங்களில் பணமாகவும், சில இனங்களில் நிலபுலங்கள், ஆடு மாடுகள் முதலிய பொருள்களாகவும் இருக்கும். இவ்வன்பளிப்பு மணக்கொடை, திருமணச்சீர், பரிசம் என்றெல்லாம் கூறப்பெறும்.

இம் மணக்கொடைப் பழக்கம் தமிழர்களில், மணமகன் தான் மணந்து கொள்ளப் போகும் மணமகளுக்கு அல்லது மணமகள் வீட்டாருக்குத் தருவதாக ஒரு வழக்கம் இருந்தது. அதற்குப் பரிசம், முலைக்கூலி என்றெல்லாம் பெயரிருந்தது. ஆனால் ஆரியர்களுக்கிடையில் இவ்வழக்கம் வேறாக, அஃதாவது, மணமகள் வீட்டார் மணமகனுக்கு அல்லது மணமகன் வீட்டாருக்கு அன்பளிப்புத் தருவதாக ஒரு நடைமுறை இருந்தது; அதற்கு வரதட்சணை என்று பெயர். அஃதாவது வரனுக்கு (மண-

மகனுக்கு) மணமகள் வீட்டார் தரும் 'தட்சணை' (காணிக்கை) ஆக இருந்தது; இப்பொழுதும் இவ்வழக்கம் இருந்து வருகிறது.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்து, தமிழகத்தில் குடியேறிய பின்னர், தமிழர்களிடையே இருந்த மணமகள் கொடையாகிய பரிசம் மாறி, மணமகன் காணிக்கையாகிய வரதட்சணைப் பழக்கம் படிப்படியாக வேரூன்றி விட்டது. மொழி, இனம், சமயம், பண்பாடு, அரசியல் இவற்றில் எப்படி ஆரியம் மேலோங்கித் தமிழியம் தாழ்ந்து அல்லது மறைந்து வருகின்றதோ, அப்படியே குடும்ப அமைப்புகளிலும் தமிழிய மரபுகள் பண்பாடுகள் வலிவிழந்து, ஆரிய மரபுகளே மேலோங்கி வருகின்றன; அல்லது வருவிக்கப் பெறுகின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். ஆரியப் பார்ப்பனர்கள் அரசியல் வலிவு பெற்று விட்டதால் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் இவை.

அதுபோலவே, மொழி நிலையிலும் அவர்கள், ஆரியப் பார்ப்பனர்கள் தங்கள் மூதாதையரின் மொழியாகிய சமசுக்கிருதத்தையே தங்கள் தாய்மொழியாகக் கருதிப் பேணி வருகின்றனர்; அதையே வளர்க்கப் பாடுபடுகின்றனர். வட இந்தியப் பகுதிகளில் வாழ்கின்ற ஆரியப் பிராமணர்களைப் போலவே, தென்னிந்தியப் பகுதிகளில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் ஆரியப்பார்ப்பனர்களும், தமிழையே பேசித் தமிழையே படித்துத் தமிழிலேயே வாழ்க்கை நடத்தினாலும், தமிழைத் தங்கள் தாய்மொழியாகக் கருதுவதில்லை; தமிழ் என்றால் முகஞ்சுளிக்கவே செய்கின்றனர். சமசுக்கிருதத்தை அவர்கள் பேசாமல் போயினும், படிக்காமல் போயினும் அதையே, தங்கள் தாய்மொழி போல், 'இனமொழி' என்று பெருமையாகக் கருதிக் கொள்கின்றனர். இன்னும் அவர்களில் சில வலக்காரத் தன்மையுள்ள படித்த, 'லௌகீக' (உலகியல் தெரிந்த) பார்ப்பனர்கள், தமிழ் மொழியைத் தங்கள் தாய்மொழி என்றும், சமசுக்கிருதத்தைத் தங்கள் தந்தைமொழி என்றும் உறவு கொண்டாடிப் பேசி ஊரை ஏமாற்றி வருகின்றனர் என்பதையும் நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இத்துடன் நில்லாமல் அவர்கள் சமசுக்கிருதத்திற்கு வலிவு உண்டாகும்படி, தங்கள் பெயர்கள், தங்கள் குடும்பப் பெயர்கள், தாங்கள் வாழ்கின்ற ஊர்ப் பெயர்கள், அங்குள்ள கோயில் பெயர்கள், அவற்றிலுள்ள ஆண்-பெண் கடவுளர் பெயர்கள் ஆகிய எல்லாவற்றையும் சமசுக்கிருதப் பெயர்களாக மாற்றினர்; மாற்றுகின்றனர்; கோயில்களில் விழா வேடிக்கைகள் சமசுக்கிருதத்தில் நடைபெறுகின்றன. இன்னும் கதா காலட்சேபங்கள், வேத பாராயணங்கள் ஆகியவை முழங்கப் பெறுகின்றன.

இவையன்றித் தமிழ்மொழியின் பெருமை குறைக்கப் பெறுகிறது. சமசுக்கிருதமொழி தேவ மொழியென்றும், தமிழ்மொழி நீசபாஷை (இழிந்த மொழி) என்றும் கூறப் பெறுகின்றன. சமசுக்கிருத மொழியோ கடவுளர்கள் பேசும் மொழியென உயர்த்தி மதிக்கப் பெறுகிறது. (தொடரும்)

தொடர் : 3

அடிமை வாழ்க்கை!

— குலாம் முகம்மது —

"கோயிலிற்குள் அவர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட தனி இடங்களிலேதான் இருக்க வேண்டும். ஏனையவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் தப்பித் தவறிக்கூட மிதித்திடக் கூடாது!"

"தாழ்த்தப்பட்ட (தலீத்) கிறித்தவர்கள்—உயர் சாதி கிறித்தவர்கள் இவர்களுக்கெனத் தனித்தனியேதாம் புதை குழிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன."

"இப்படிச் செய்கின்றார் தலீத் கிறித்தவர்—நன்றாகப் படித்த அந்தோணி சேவியர்."

"அக்டோபர்—28. 1987 'பெற்றிமரியம்: அகவை 18. இவள் தாழ்த்தப்பட்ட கிறித்தவப் பெண். குட்டத்துப்பட்டி என்னும் சிற்றூரைச் சார்ந்தவள். இது திண்டுக்கல்லிலிருந்து 14 கி. மீ. தொலைவிலுள்ளது."

"இவள் தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்தவள்—இதைக் கண்ட அவள் தாய், கூச்சலிட ஊரார் வந்து காப்பாற்றினர்."

அதற்கு முதந்தைய நாள் அவள் உடல் நிலை சரியில்லை—அவரம்பட்டி என்னும் பக்கத்துச் சிற்றூர்க்கு மருத்துவம் பார்க்கச் சென்று கொண்டிருந்தாள்.

செல்லும் வழியில் அவள் அங்கிருந்த தேவஇல்லத்தின் வளாகத்தைக் கடந்து கொண்டிருந்தாள்.

சீலன் சோசப், ஆரோக்கியம்—என்ற இருவர் அவளைக் கடத்திச் சென்றனர்; கற்பழித்தனர்.

—இதனை யாரிடமாவது சொன்னால் உன்னையும் ஊரில் உள்ளவர்களையும் 'அழிவு' பண்ணிவிடுவோம்'—என எச்சரித்து அனுப்பி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியை வெளியே சொல்லி அத்தனைப் பேருடைய வாழ்க்கையையும் இன்னலுக்குள்ளாக்கு வதை விட தனது வாழ்க்கையை முடித்துக் கொள்ளலாம் என்ற முடிவை செயல்படுத்தும் போதுதான் தாய் கண்டு கொண்டாள்.

தாழ்த்தப்பட்ட மக்கள் காவல் நிலையம் சென்றார்கள் முறையீடு செய்ய. தாழ்த்தப்பட்ட பெண்—உயர் சாதி இளைஞர்கள் மீது தரும் முறையீட்டை ஏற்றுக் கொள்ள முடியாது—என்று முறையீட்டைப் பதிவு செய்ய மறுத்து விட்டனர் காவல் நிலையத்தார்.

சிற்றூர்ப்புற மக்கள் பாதர் தாமசு ஞானதுரையிடம் முறையீடு செய்தார்கள்.

அவர், ''இந்தச் செய்தியைக் காவல்துறையிடமோ—அறமன்றத்திடமோ எடுத்துச் சென்று விடாதீர்; அப்படிச் செய்தால் உங்கள் அனைவரையும் மத வெளியேற்றம் செய்து விடுவேன்'' என்றார்.

சில உயர்சாதிக் கிறித்தவர்கள் இந்தச் சிக்கலை அதற்கு மேலுள்ள பாதிரியாரிடம் எடுத்துச் சென்றார்கள்;

அவர் 'அவள் உங்கள் இனத்தைச் சார்ந்தவளா?'—என்று கேட்டார்.

இவர்கள் 'இல்லை' என்றார்கள்;

'அப்படியானால் நீங்கள் ஏன் கவலைப்படுகின்றீர்கள்?' என்றார்.

நவம்பர் 3-ஆம் நாள் அத்தனைத் தாழ்த்தப்பட்ட மக்களும் போராடப் போவதாக அறிவித்தனர்;

இதற்கு அஞ்சிய காவல்துறை வழக்கைப் பதிவு செய்தது. ஓர் ஆண்டு வரை யாரும் சிறை செய்யப்படவில்லை.''

(Illustrated Weekly of India June 25, 1989—Pages 36,39)

தீண்டாமைக் கொடுமையிலிருந்து விடுதலை தேடிக் கிறித்தவத்தை ஏற்றுக் கொண்டவர்களின் நிலை இது! இங்கே!

இதே நிலைதான் ஏர்ள்லிட்டில் அவர்களுக்கும்!

கிறித்தவத்தில் தம் மக்களை இணைத்தால் இந்த நிறவெறி அவமானங்களிலிருந்து அவர்கள் விடுபடுவார்கள் என எதிர் பார்த்தார் ஏர்ள் லிட்டில்— ஏமாறினார்;

வெறுக்கையின் விளிம்பில் நின்று கொண்டிருந்தபோது ஓர் அதிர்ச்சி அவரையும்—அவர் குடும்பத்தையும் ஆட்கொண்டது;

நிறத்தால் கறுப்பராய்ப் பிறந்து விட்டதால் தங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களையும் இழிவுகளையும் கிறித்தவம் களையும் என எதிர்பார்த்தார் ஏர்ள் லிட்டில்;

அதனால்-அல்லும் பகலும் அயராது உழைத்தார். கிறித்தவ குழுகத்திற்குக் கறுப்பர்களை மதம் மாற்றினார்;

தாம் சார்ந்த இனத்தின் விடுதலை, உரிமை, இவையே இந்த உலகில் தமது லட்சியம் என உழைத்தார்.

இந்த இன விடுதலைப் போரில் ஏர்ள் லிட்டிலுடன் எல்லா வகையிலும் ஒரு படைக்கலனைப் பயன்பட்டார் ஏர்ள் லிட்டிலின் துணைவியார் லௌசி லிட்டில்;

லௌசி லிட்டில்—ஏர்ள் லிட்டில் இவர்களின் இன்னல்கள் நிறைந்த இல்லத்தில் இறைவன் வழங்கிய அருட்கொடை மூன்று

குழந்தைகள்; நான்காவது குழந்தை வேறு அந்த நங்கை நல்லாளின் வயிற்றுக்குள் வளர்ந்து கொண்டிருந்தது.

மகப்பேறுகள், இல்லறத்தில் இயல்பாகவே மனைவி மீது வீழும் சுமை, வறுமையின் வாட்டம், இவற்றினூடே கணவனது கொள்கை ஓட்டத்தில் ஏற்படும் தடைகள், ஏக்கம், வெறுக்கை இவை அனைத்தையும் ஒருங்கே தாங்கி ஒப்பற்றதொரு துணையாக நின்றாள் அந்தப் பெண்மணி.

ஏர்ள் லிட்டில் கறுப்பர்களின் நல்வாழ்வை மனத்தில் கொண்டு உழைக்கத் தொடங்கியதிலிருந்து அவருக்கு அவ்வப்போது மிரட்டல்கள்- எச்சரிக்கைகள்—வந்த வண்ணமிருந்தன, வெள்ளை நிற வெறியர்களிடமிருந்து. இவற்றையெல்லாம் ஏற்று கொண்டு அச்சமும், பதற்றமும் நிறைந்ததொரு வாழ்க்கையையே நடத்தி வந்தார் ஏர்ள் லிட்டில். அவர் வெளியே சென்றால் மீண்டும் வீடு வந்து சேரும் வரை அவரது மனைவிக்கு அமைதியே இருக்காது.

ஒருநாள் மாலை! ஏர்ள் லிட்டில் வீட்டில் இல்லை. லௌசி லிட்டிலும், குழந்தைகளும் வீட்டு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்!

வாயிற் கதவுகளை யாரோ தட்டும் ஒலி கேட்டது.

சற்று நேரத்திற்கெல்லாம் 'கதவைத் திறக்காவிட்டால் உடைப்போம்' என்பதை உணர்த்தும் ஓசையாக அது உயர்ந்தது. இனம் புரியாத அச்சம் ஆட்கொண்டது லௌசிலிட்டிலின் உள்ளத்தில் துணிவை வரவழைத்துக் கொண்டு வாயிற் கதவுகளை நோக்கி விரைந்தாள் லௌசி லிட்டில். கதவுகளைத் திறந்தாள்.

சில முரட்டு மக்கள்—வெள்ளை நிறத்தோலால் போர்த்தப்பட்டவர்கள்—நின்று கொண்டிருந்தார்கள்.

'ஏர்ள் லிட்டில் இருக்கின்றாரா'—வந்தவர்கள் கேட்டார்கள்.

முரட்டுத்தனம் அவர்களின் குரலிலும் தொனித்தது.

'இல்லை!' தளர்ந்த குரலில் விடை சொன்னாள் லௌசி லிட்டில். வந்தவர்கள் இந்த விடையில் நிறைவு அடைந்ததாகத் தெரியவில்லை.

லௌசி லிட்டிலைக் கடந்து வீட்டின் உள்ளே நுழைந்தார்கள். வீட்டைத் துழாவினார்கள். ஏர்ள் லிட்டில் உண்மையிலேயே வீட்டில் இல்லை என்பது உறுதியானது. ஏமாற்றத்தின் முகவரிகள் அவர்களின் முகத்தில்! வெறிபிடித்தவர்களைப் போல், தாங்கள் கொண்டு வந்த துப்பாக்கிகளின் பின்புறத்தால் கதவுகளையும் பலகணிகளையும் உடைத்தார்கள்.

லௌசி லிட்டில் தன் குழந்தைகளோடு ஓடி ஒதுங்கி ஒளிந்து நின்று கொண்டிருந்தாள். கோபந் தீர வீட்டிலிருந்தவற்றைத் தூள் தூளாக்கிய பின்னர் வெளியேறினர் வந்தவர்கள்.

வெளியேறிடும் போது, வெள்ளையர்களின் மனம் கோணும்படி நடந்தால் உங்களை யாராலும் எங்களிடமிருந்து காப்பாற்றிட முடியாது என்பதைச் சொல்லி வை—உன் கணவனிடம்'' என உரக்க முழங்கிக் கொண்டே சென்றனர்.

இரவு-! ஏர்ள் லிட்டில் வீடு வந்து சேர்ந்தார். யாரும் எந்த விளக்கமும் சொல்லாமலே நடந்தவற்றைப் புரிந்து கொண்டார் ஏர்ள் லிட்டில். மனைவியின் முகம் நோக்கினார்.

'கறுப்பர்களின் — உரிமை—விடுதலை இவற்றில் அக்கறை காட்டுபவர்களுக்குத் தரப்படும் பரிசு மரபு மீறப்படாமல் உங்களுக்கும் தரப்பட்டுள்ளது.' இதை லௌசி லிட்டிலின் பார்வையே சொல்லிற்று. மெல்ல வாய்திறந்து நடந்தவற்றை விளக்கினாள், வந்தவர்கள் விட்டுச் சென்ற எச்சரிக்கையையும் எடுத்துச் சொன்னாள்.

தொடர்ந்தன அச்சமும் பதற்றமும் அவர்கள் வாழ்வில்! வீட்டை மாற்றுவது என முதலில் முடிவு செய்தார்கள். பின்னர் மகப்பேறு முடிந்த பின்னர் என முடிவை மாற்றிக் கொண்டனர்.

1925-ஆம் ஆண்டு மே திங்கள் 25-ஆம் நாள்—லௌசி லிட்டில், அமெரிக்காவில் ஓமகா என்னுமிடத்தில் உள்ள கறுப்பர்களுக்காக ஒதுக்கப்பட்ட மருத்துவமனையில் ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றாள்.

மால்கம் - (Malcom) எனப் பெயரிட்டார்கள் அந்தக் குழந்தைக்கு. வீட்டை மாற்றும் முயற்சி இப்போது மீண்டும் தலை தூக்கிற்று! வறுமையின் பிடி சற்று தளர்ந்தவுடன் வீடு மாறலாம் என முடிவாயிற்று. நிறவெறியர்களின் முரட்டுத் தனத்திற்கு ஆளாகி உருக்குலைந்த அதே வீட்டில்தான் ஏர்ள் லிட்டில் தொடர்ந்து வாழ்ந்து வந்தார்.

தங்கள் வீட்டைத் தாக்கிச் சென்றவர்கள் மீண்டும் வருவார்கள்; தன் கணவனுக்கு ஏதாவது நடந்து விடும் என்ற அச்சம் எப்போதும் லௌசி லிட்டிலை ஆட்டிப் படைத்துக் கொண்டே இருந்தது. ஆகவே அங்கிருந்து (ஓமகா) லான்சிங் என்ற இடத்திற்குக் குடிபெயர்ந்தார்கள். எனினும் அச்சம் அவர்கள் மனத்தை விட்டு அகலவில்லை.

ஏர்ள் லிட்டில் வீட்டை விட்டு வெளியேறிடும் போதெல்லாம் - கவனம் - கவனம் - என எச்சரிப்பாள் லௌசி. எதைப் பற்றியும் கவலைப் படாமல் நீக்ரோக்களின் விடுதலையே தம் நோக்கம் என ஏர்ள் லிட்டில் தன் கொள்கைப் பணியைத் தொடர்ந்தார். அடிமைகளாய் அல்லும் பகலும் அல்லலுறும் கறுப்பர்களின் விடுதலைக்குப் கிறித்தவம் கை கொடுக்கும் என்ற எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக ஏர்ள் லிட்டிலின் உள்ளத்திலிருந்து அகன்றிடத் தொடங்கியது. கறுப்பர்களின் உரிமைகளை மீட்டுத் தந்திட எத்தனையோ விடுதலை இயக்கங்கள் தோன்றி மறைந்தன அமெரிக்காவில்.

அவற்றில் ஒன்று மார்க்சு அவ்ர்லியகு கார்வி நடத்திய இயக்கம். இந்த இயக்கத்தின் பெயர் (Universal Negro Improvement Association) என்ற உலக நீக்ரோக்களின் முன்னேற்றப் பேரவை என்பதாகும். இந்த இயக்கத்தின் கொள்கைகள்:-

'—அமெரிக்காவில் ஒருபோதும் கறுப்பர்கள் மக்களாக மதிக்கப்பட மாட்டார்கள்.

கறுப்பர்கள் அமெரிக்காவில் வாழ்வது வரை அவர்கள் எந்த உரிமையையும் பெற்றிட முடியாது. கறுப்பர்களின் சொந்த நிலம் ஆப்பிரிக்கா!

ஆகவே ஆப்பிரிக்கா நோக்கிப் பயணமாவோம்.

அங்கே கறுப்பர்களால், கறுப்பர்களுக்காக நடத்தும் ஒரு கறுப்பர் குடியரசை அமைப்போம்.

அதை உரிமைகள் மலிந்த வல்லரசாக அமைப்போம்,

—இந்த முழக்கங்களை முன்னே வைத்து ஒரு பேரியக்கத்தை நடத்தினார் கார்வி.

கறுப்பர்களாய்ப் பிறந்து விட்ட கொடுமை போக்க கிறித்தவம் பயன்படும் என நம்பி ஏமாறி, வெறுப்புக்கு உள்ளாகி நின்ற ஏர்ல்லிட்டில், கார்வியின் முழக்கங்களில் பொருள் இருப்பதாக உணர்ந்தார். கார்வியின் இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டார், ஏர்ள் லிட்டில். முழு மூச்சாய் உழைத்தார். கறுப்பர்களின் குறைந்தபக்க விடுதலையைக் கூட விரும்பவில்லை வெள்ளையர்கள். வெறுப்பு குருதியில் அவர்களுக்கு. ஆகவே ஏர்ள்லிட்டிலின் துடிப்புமிகு பணி அவர்களைத் துடிதுடிக்கச் செய்தது. ஏர்ல்லிட்டிலை முடக்கிப் போட்டிட எத்தனையோ இன்னல்களையும், இடையூறுகளையும் ஏற்படுத்தினார்கள்.

தனக்கெதிராகத் தொடுக்கப்பட்ட எதிர்ப்புகளை ஒரு விடுதலைப் போரில் களம்காணும் காளை சந்தித்தே தீர வேண்டிய கணைகள் என எடுத்துக் கொண்டார் ஏர்ள் லிட்டில். ஆகவே இரட்டிப்பு வேகத்தோடு பம்பரமாகச் சுழன்று பணியாற்றினார். விளைவு கறுப்பர்களின் விடுதலை இயக்கம் அமெரிக்காவை ஆட்கொண்டது.

இனியும் ஏர்ள் லிட்டிலை விட்டு வைப்பது வெள்ளையர்களின் துரைத்தனத்திற்கு பேரேதம் என முடிவு செய்தனர். ஆகவே ஏர்ள் லிட்டிலை உலகை விட்டே அனுப்பி விடுவது என முடிவு செய்தனர். ஒரு நாள் இரவு! ஏர்ள் லிட்டிலும் அவர்களுடைய குடும்பத்தினரும் ஆழ்ந்த தூக்கத்தில்! இப்போது லௌசி லிட்டில் தங்கள் ஐந்தாவது குழந்தையை வயிற்றுக்குள் சுமந்து கொண்டிருந்தாள். ஆழ்ந்த உறக்கத்தை கலைத்து அதிர்ச்சி தரும் அளவில் துமுக்கிகளின் ஒலி! அது அவர்களை அதிர வைத்தது! தூக்கம் கலைந்தது!

(தொடரும்)

நன்றி —சமரசம் மே, 92

(நல்ல அறிவு முதிர்ச்சியுடைய குழந்தைகளின் பேச்சு, செயல் முதலியவை மிகவும் வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்; பெரியவர்களால் பண்ண இயலாத கற்பனைத் திறன்களும், செயல் திறன்களும் சில நேரங்களில் அவர்கள் செய்வது, மிகவும் கவனித்து ஊக்கப்படுத்தத் தக்கன.

அத்தகைய குழந்தைகளின் பேச்சுகள், செயல்கள், நடவடிக்கைகள் முதலியவற்றைக் கவனித்து இந்தப் பகுதிக்கு எழுதி அனுப்புங்கள். குழந்தைகளின் படங்களையும் அவர்களின் முழுப் பெயர், அகவை, கல்வி வகுப்பு முதலியவற்றையும் அனுப்புவது நல்லது.

1. செந்தணலின் குறும்புகள் (தொடர்ச்சி)

—சித்திரச் செந்தாழை ஆறிறைவன், அறி.மு.,அமெரிக்கா.

10. மருந்தாகிலும் வாங்கி வரலாமே!

நாங்கள் தமிழகத்திற்கு வந்திருந்த பொழுது, என் தந்தையார் நாள்தோறும் மாலை தென்மொழி அலுவலகத்திலிருந்து வருகையில் தணலுக்கு நினைவாக ஏதாவது தின்பண்டங்கள் வாங்கி வந்து கொடுப்பார்கள்.

நாள்தோறும் மாலையில் அவர் வீட்டில் நுழைந்தவுடன் தணல் ஓடிப்போய் அவர் முன் நிற்பான். உடனே அவர் தம் கைப்பையிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்துத் தருவார். அது தின்பண்டமாக இருக்கும்; இவன் அதைச் சட்டென்று வாங்கிக் கொண்டு (பிடுங்கிக் கொண்டு என்று கூடச் சொல்லலாம்!) ஓடிப்போய் ஒரு நாற்காலியிலோ, மொட்டானிலோ (Stool) உட்கார்ந்து கொண்டு சாப்பிடுவான், இது, நாங்கள் அங்கிருக்கும் வரை ஒரு வழக்கமாகவே ஆகி விட்டது.

ஒரு நாள் தணலுக்குச் சற்றே உடல் நலம் சரியில்லை. சிறிது காய்ச்சல் அடித்தது. அப்பா காலையில் அலுவலகம் போகும் பொழுதே இதைக் கவனித்து விட்டுச் சென்றார். அன்று அவர் மாலை வீடு திரும்பும்போது, வழக்கம் போல் தணல் குட்டி ஓடிப் போய் அம்முப்பாவின் முன் நின்றான்: ''எதற்கப்பா ஓடி வரு-

கிறாய்? நான் ஒன்றும் இன்றைக்கு வாங்கி வரவில்லையே! உனக்குத் தான் காய்ச்சலாயிற்றே'' என்று அப்பா கூறினார்கள், அவனிடம். ஓடி வந்து ஏமாற்றம் அடையக் கூடாது என்பதற்காக, அதற்குரிய அவன் தொடர்பான காரணத்தை எடுத்துச் சொன்னார்கள். ''அப்படியானால் மருந்தாகிலும் வாங்கி வரலாமில்லையா?'' என்று தணல் சடக்கென்று அப்பாவிடம் கேட்டான். அங்கிருந்த அனைவரும் வியந்து சிலையாய் நின்றோம்.

11. அம்முப்பா தட்டு பெரியது!

நாங்கள் தமிழகத்தில் எம் தந்தையார் வீட்டில் தங்கியிருந்த பொழுது, தணலும் மிகச் சுறுசுறுப்புடனும் அறிவுணர்வுடனும் இயங்கிக் கொண்டிருந்தான்.

தணல் எப்பொழுதும் தந்தையாருடன்தான் சாப்பிடுவான். விடுமுறை நாள்களில், ஞாயிறுகளில் மட்டுமே தந்தையார் காலை பகல், இரவு உணவுகளை வீட்டில் எடுத்துக் கொள்வார். மற்ற நாள்களில் இரவுணவு மட்டுந்தான் எடுத்துக் கொள்வதால்-காலை, பகல் உணவு வேளைகளில் மட்டுமே தணல் தனித்துச் சாப்பிடுவான்.

தந்தையார் வீட்டில் உண்ணும் விடுமுறை நாள்களில் அவனும் அவன் அம்முப்பாவும் (தந்தையாரும்) மட்டுமே அருகருகிருந்து உண்பார்கள். அப்பொழுதெல்லாம் தணல் அப்பாவுக்கு வைக்கும் உணவையும், தனக்கு வைக்கும் உணவையும் ஒப்பிட்டுப் பார்ப்பான். அவனுக்கு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை; ஒரு நாள் கேட்டே விட்டான். ஆங்கிலத்தில்;

''அம்மா, அம்முப்பாவுக்கு மட்டும் எப்பொழுதுமே பெரிய தட்டு, நிறைய காய்கறி, சோறு, பெரிய செம்பில் தண்ணீர் வைத்துக் குவளையிலும், தண்ணீர் வைக்கிறீங்க. எனக்கு மட்டும் சின்ன தட்டு; காய்கறியும், சோறும் கொஞ்சம் கொஞ்சமே வைக்கிறீங்க; சின்ன குவளைத் தண்ணீர் மட்டும். இனிமேல் நான் அம்முப்பா தட்டில்தான் சாப்பிடுவேன். அவர் என் சின்ன தட்டில் சாப்பிடட்டும் என்று, ஆத்திரத்தில் சொல்லி, விரைந்து சினத்துடன் எழுந்து, தந்தையாருக்கு வைத்திருந்த உணவுத் தட்டைத் தானெடுத்துக் கொண்டு, அவன் தட்டுணவை எடுத்து அப்பாவுக்கு வைத்தான். அதேபோல் அவன் காய்கறித் தட்டையும் தந்தையாருக்கு வைத்து விட்டு அவரின் காய்கறித் தட்டையெடுத்துத் தனக்கும் வைத்துக் கொண்டான். அப்படியே அவருக்கு வைத்திருந்த செம்பு நீரையும் தானெடுத்து வைத்துக் கொண்டான். தந்தையார் அவனின் இந்தச் செயலையும் அதன் பரபரப்பான வேகத்தையும் கண்டு மகிழ்ச்சியுடன் சிரித்து என் தாயாரையும் பிறரையும் அழைத்து இச்செயலைக் கூறியும் காட்டியும் அவன் அறிவுணர்வையும் சிந்தனையையும் உணர்த்தி வியந்தார்.

12. எழுதிக் கொண்டிருக்கும் போது எப்படிப் பேச முடியும்?

நானும் தணலும் தமிழகம் வந்திருந்தபொழுது நடந்தது தான் இதுவும்.

நானும் தம்பி பொழிலனும் ஒருமுறை விளையாட்டாகச் சிறு சண்டையிட்டுக் கொண்டு, இரண்டு நாள்கள் ஒருவருடன் ஒருவர் பேசாமலிருந்தோம். அந்நிலை எனக்கு மிகுந்த மன-வருத்தத்தைத் தந்தது. முழுமையாக இரண்டு நாள் இப்படித் தம்பியிடம் பேசாமல் இருந்து விட்டோமே என்று நானே உள்-ளுக்குள் வருந்திக் கொண்டிருந்தேன். இருந்தாலும் நானே வலியப் போய்ப் பேசி அரைமனத்தோடு அவனை இசைய வைக்க மனம் விரும்பவில்லை.

எனவே அவன் தன் அறையில் தனியே இருந்தபொழுது, தணலை அனுப்பி அவன் மாமாவுடன் பேசிக் கொண்டிருக்குமாறு சொல்லியனுப்பினேன்.

தணலும் தன் மாமாவருகில் மெதுவாகச் சென்று உட்-கார்ந்து ஏதோ சிலவற்றைப் பேசிக் கொண்டும் எதையெதையோ-பற்றிக் கேள்வி கேட்டுக் கொண்டுமிருந்தான். ஆனால் தம்பியின் வாயிலிருந்து விடையெதுவும் வரவில்லை.

தணலுடன் பேசுவதைக் கேட்டாகிலும், மனநிறைவு கொள்ளவே தணலை அனுப்பினேன். ஆனால் தம்பி தான் தண-லிடம் பேசினாலும் கூட தன் இறுக்கம் தளர்ந்து தான் தாழ்ந்து போய் விட்டதாக நான் கருதிக் கொண்டால் என்ன செய்வது என்று கருதியோ என்னவோ, கண்கள் ஏட்டிலும், கை தூவலைப் பிடித்துக் கொண்டும் மனம் மட்டும் இப்படி அப்படி சற்று அலைந்து கொண்டிருந்ததைக் கவனித்தேன்.

தணல் குட்டி தான் வெளிப்படுத்திய கருத்துகளுக்கு விடை எதுவும் வராதது கண்டோ என்னவோ, மெதுவாக தான் அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து, அறையை விட்டு என் அருகில் வந்து அமர்ந்து கொண்டான்.

நான் அவனிடம் அவனை ஆறுதல் படுத்த "ஏன் தணல் வந்து விட்டாய். மாமா உன்னிடம் பேசவில்லையா?" என்று கேட்டேன்.

அதற்கவன், 'மாமா படித்துக் கொண்டிருக்கிறார்கள். இல்லையா? படிக்கும்போது எப்படிப் பேசமுடியும்? அதனால்தான் என்னிடம் பேசவில்லை" என்று எனக்கே அறிவுறுத்துவது போல் கூறினான்.

தம்பியும் இதைக் கேட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டும். அதனால் இதழில் புன்முறுவல் இழையோடியது. அதுவே எனக்கு அப்பொழுதைய மனநிலையில் கோடி மகிழ்வைத் தந்தது.

(தொடரும்)

உருதுமொழி மீதான இந்தியக் கண்ணோட்டம்!

— சையது சகாபுத்தீன் —

உருது மொழியை இசுலாத்தோடும், பாக்கித்தானோடும்-மட்டுமே தொடர்புபடுத்தி 'மொழியை மதநோக்கப்படுத்தும் முயற்சி' இந்தியாவில் நீண்ட காலமாகவே நடந்து வருகிறது.

உருது பாக்கித்தானியர்களின் மொழி என்ற கண்ணோட்டத்தில் இங்கு பார்க்கப்படுகிறது. இந்தக் கண்ணோட்டம் தேவையற்றது; உண்மையில் உருது இந்தியாவுக்கும் பாக்கித்தானுக்கும் இடையில் ஒரு பாலமாக விளங்குகிறது. பாக்கித்தான் அல்லாத வேறு பல நாடுகளிலும் உருது பேசும் மக்கள் கணிசமான அளவு வாழ்கிறார்கள்.

கொள்கைகளைத் திட்டமிடுபவர்கள் இந்தியாவுக்குப் பாக்கித்தானையும், இந்துவுக்கு முசுலிமையும், இந்திக்கு உருதையும் சமன் செய்தே பார்க்கிறார்கள்.

உருது பாரசிக எழுத்து வடிவத்தில் எழுதப்படுகிறது; அரபியிலோ அல்லது அரபி-பார்சி அகரவரிசையிலோ எழுதப்படவில்லை.

மேலும், எந்த முசுலிம் இந்தியரும்—அவர் வகுப்புணர்வாளரோ மதச்சார்பின்மையரோ அவர் தலைவரோ பொதுவான தொண்டரோ—உருது 'முசுலிம் மொழி' என்று உரிமை கொண்டாடியதில்லை. ஆனால் இந்தியாவில் உருது மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் 95 விழுக்காடு முசுலிம்களாக இருக்கிறார்கள் என்பது உண்மை; எனக்குத் தெரிந்தவரை இந்தியாவில் எந்த முசுலிமும் தனிமாந்தனாகவோ, கூட்டாகவோ அல்லது அமைப்பு முறையாகவோ இந்துக்களோடு சேர மறுத்து உறுதிமொழியைப் பாதுகாக்கப் போராடுவதாகத் தெரியவில்லை; ஆனால் அவர்கள் உருதுமொழியைப் பொறுத்த மட்டில் இந்துக்களின் கூட்டையும், ஆதரவையும் பெறக் கடும் முயற்சி செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள்;

சர்சயீத் காலத்திலிருந்தே இந்து தலைவர்கள் உருது மொழிக்கு எதிராக இந்துக்களைத் திருப்பவும் அதற்கு மாற்றாக இந்தியை முன்னிலைப்படுத்தவும் வெளிப்படையாகவே முயன்று வந்திருக்கிறார்கள். முதலில் ஆட்சித் துறையிலும், பின்னர் கல்வியிலும் அவர்கள் இந்தியை உருதுவுக்கு மாற்றாகக் கொண்டு வந்தார்கள், தேசப் பிரிவினைக்குப் பிறகு உருது இங்கு அடித்தளம் அற்றதாகவும், பாக்கித்தானில் தாய்நாடு இல்லாததாகவும், தன் உரிமையைச் சிந்தி மொழிக்குப் பாதிவிட்டுக் கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதாகவும் ஆகிவிட்டது. இன்றைக்கு இந்தியாவில் உருது மடியக்கூடிய மொழியாகவே இருந்து வருகிறதுஉருதுமொழியைப் பாதுகாக்க வேண்டுமானால் அதனை இளைய தலைமுறையினரைக் கற்கச் செய்யவேண்டும்; உருதுவைத் தாய்-

(தொடர்ச்சி 14-ஆம் பக்கம் பார்க்க)

பிளாடி பசு- (Platy Pus)

—அ. இராமசாமி

உலகில் எத்தனையோ விலங்குகள் வாழ்கின்றன: அவை பரவி
வாழாத இடமே இல்லை. நாட்டுக்கு நாடு, இடத்துக்கு இடம்
மாறுபட்டும், உருமாறியும், நிறந்திரிந்தும் காணப்படுகின்றன;
அவை அனைத்தும் வேடிக்கையானவை; வியப்பானவை! இவற்-
றில் ஆசுதிரேலியா கண்டத்தில் வாழும் பிளாடி பசு என்னும்
விலங்கைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்;

பிளாடி பசு ஒரு பாலூட்டி: ஆனால் மற்ற பாலூட்டிகளைப்
போல இது குட்டிகள் போடுவதில்லை; பறவைகளைப் போல
முட்டை இடும்! முட்டைகள் பொரிந்து, குஞ்சுகள் வெளிவந்த-
வுடன் மற்ற பாலூட்டிகளைப் போலவே, இதுவும் குட்டிகளுக்குப்
பாலூட்டி வளர்க்கிறது. ''வாத்து மூக்கு'' என்பது இதன்
மற்றொரு பெயர். இதன் மூக்கு வாத்தின் அலகைப் போல்
அகன்று தட்டையாக இருப்பதால், இதற்கு அப்பெயர் வந்தது;
இது நீரில் நன்றாக நீந்தும். இதன் கால்களில் வாத்தின் கால்-
களைப் போல் நீந்துவதற்கு ஏற்ற சவ்வுகள் உள்ளன; ஆற்றங்-
கரையில் ஐம்பது அடிவரை சுரங்க வழிபோலப் பாதை அமைக்-
கும். இதன் முடிவில் ஒரு பெரிய அறை அமைத்து அதில் புல்லால்
கூடு போல கட்டி வைக்கும். வீட்டின் வாசல் நீர்மட்டத்திற்கு
மேலே இருக்கும். வீட்டிற்கு வேறு ஒரு வாசலும் இருக்கும்!

தன் அலகால் ஆற்றங்கரையில் உள்ள மணலைக் கிளறிப் புழு,
பூச்சி, இறால் முதலியவற்றைப் பிடித்துத் தின்னும்: இதற்குப்
பசி அதிகம். எப்போதும் இரை தேடி அலைந்து கொண்டே இருக்-
கும். இதற்குக் கன்னத்தில் உணவைத் திரட்டிக் காத்து
வைத்துக் கொள்ள பையுண்டு: அதில் புழு, பூச்சிகளை அடக்கி
வைத்துக் கொண்டு, பின்னல் தின்னும்.

ஆண்களின் பின் கால்களில் ஒரு நச்சுச் சுரப்பி உண்டு;
இவ்விலங்கு தற்காப்புக்காக மட்டும் நஞ்சைப் பயன்படுத்து-
கிறது:

இ'து. ஒரு தடவைக்கு இரண்டு முட்டைகள் இடும்; முட்டை-
கள் அழுக்கடைந்த வெள்ளை நிறமானவை. இவற்றைத் தாய்
ஒரு பையில் சுமந்து செல்லும். முட்டையிலிருந்து குட்டிகள்
வெளிவந்த பின்னும் அவற்றை அந்தப் பையில் சுமந்து செல்லும்;
இது பார்வைக்குக் கீரியைப் போல் இருக்கும்; O

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

— *அமைச்சர்*

முதல் அச்சு நூல்!!

இந்தியாவில் முதன்முதலில் அச்சான நூல் தமிழ் நூல்தான்; அது கோவாவில் 1578-ஆம் ஆண்டில் அச்சிடப் பெற்றது. அது ஹாரிக் ஹென்றிக்ஸ் (Horik HendrIx) என்பவர் போர்த்துக்கீசிய மொழியில் எழுதிய 'Doetrina Christaru' என்ற நூலின் தமிழ்மொழி பெயர்ப்பாகும். அதன் பெயர் 'தம்பிரான் வணக்கம்' என்பதாகும்; (அப் போர்த்துக்கீசிய நூல் தலைப்பின் உண்மையான பொருள் 'கிறித்துவ மதக் கொள்கைகள்' என்பதாகும்.)

முதன் முதலில் இந்தியாவில் அச்சிடப்பெற்ற இந்நூலின் மூலப்படி 'ஹார்வர்டு' பல்கலைக் கழகத்தில் உள்ள ஹூக்டன் நூலகத்தில் உள்ளது. அதன் படி ஒன்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உள்ளது.

இனி, இந்தியாவுக்கு வெளியே முதன் முதலில் அச்சான இந்திய நூலும் தமிழ் நூல்தான். அது போர்ச்சுகலில் உள்ள லிஸ்பன் நகரில் 1554-இல் அச்சானது. அந்த நூலின் பெயர் "The Gartilha" என்பதாகும். இது உரோமன் எழுத்துகளில் அச்சிடப் பெற்றதாகும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

மொழியாகக் கொண்டவர்களின் பிள்ளைகள் மட்டும் உருது கற்பதால் உருதுமொழி வளர்ந்துவிடாது. உருதுவை தாய்மொழியாகக் கொள்ளாதவர்களும், அவர்களின் குழந்தைகளும் கூட உருதுவை இரண்டாவது மொழியாகவோ அல்லது மூன்றாவது மொழியாகவோ கற்க முன்வருவதன் மூலமே உருதுமொழியைக் காப்பாற்ற முடியும்; வளர்க்க முடியும்; குறிப்பாக, உருது பேசும் மக்கள் அடர்த்தியாக உள்ள உத்திரப்பிரதேசம், பீகார், ஆந்திரப்பிரதேசம், மகாராட்டிரா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மற்றும் ராசசுத்தான் மாநில மக்கள் நடுவில் இந்தப் பணி நடைபெறவேண்டும்.

— நன்றி - சமரசம் ஏப், 1-1592 ○

● பொதுவாக மூளையின் அளவுக்கும் அறிவு நுட்பத்திற்கும் தொடர்பில்லை என்று இதுவரை கருதப்பட்டு வந்தது. அமெரிக்காவில் உள்ள டெக்சாசு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மூளை ஆய்வியல் அறிஞர் லீ வில்லர்மான் என்பவர் பலவகையான மூளை எடை கொண்டவர்களை ஆய்ந்து, மூளையின் அளவு பெரிதாகப் பெரிதாக அறிவும் அதிகமாக உள்ளது என்னும் உண்மையைக் கண்டு பிடித்துள்ளார். இவருடைய ஆய்வுக் கட்டுரை 'அறிவும் அறிவியலும்' (Intelligence and Science) என்னும் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாய்வு முடிவை ஏல் பல்கலைக்கழக அறிவியல் பேராசிரியர் இராபர்ட் சூல்டசும் உறுதிப்படுத்தியுள்ளார்.

உலக நாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!

18. பக்ரெய்ன் (BAHRAIN) —குடியரசு

நிலப்பரப்பு : 622 ச. அ. மா.
மக். தொகை : 3.80,000
மக். தொ. பெ : 2.8%
மக்.வா. எ : ஆண் : 64, பெண் : 68 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 40%
தலைநகர் : அல் மனமா
மொழி : அரபிக்
நாணயம் : பக்ரெய்ன் டினர்—100 பில்ஸ்.

19. குயேட்டர் (QATAR) —குடியரசு

நிலப்பரப்பு : 1,1437 ச. அ. மா.
மக். தொ : 2.60 000
மக். தொ. பெ : 6.5%
மக். வா. எ : ஆண் : 55, பெண் : 58 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 40%
தலைநகர் : அட் டாவா
மொழி : அரபிக்
நாணயம் : ரியால் —100 டிர்ஆம்.

20. யுனைடெட் அராப் எமிரேட்ஸ் (UNITED ARAB EMIRATES) —குடியரசு

நிலப்பரப்பு : 9,2 100 ச. அ. மா.
மக். தொ : 11,75,000
மக். தொ. பெ : 7.3%
மக். வா. எ : ஆண் : 60, பெண் : 74 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 53%
தலைநகர் : அலு சாலி
மொழி : அரபிக்
நாணயம் : UAE டிர்ஆம் — 100 பில்ஸ்

21. ஏமென் (YEMEN) —முடியரசு

நிலப்பரப்பு : 1,95,000 ச. அ. மா.
மக். தொ : 71,60,000
மக். தொ. பெ : 2.3%
மக். வா. எ : ஆண் : 37, பெண் : 39 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 12%
தலைநகர் : சானு

மொழி : அரபிக்
நாணயம் : ஏமென் பேப்பர் ரியால் —100 ரியால்

22. தென் ஏமென் (SOUTH YEMEN) – குடியரசு
நிலப்பரப்பு : 2,87 682 ச. அ. மா.
மக். தொ : 20,30,000
மக். தொ. பெ : 1.8%
மக். வா. எ : ஆண் : 40, பெண் : 42 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 25%
தலைநகர் : பாலடியாட் ஏடன்
மொழி : அரபிக்
நாணயம் : தென் ஏமென் டினார் —1000 பில்ஸ்

23. ஓமான் (OMAN) — குடியரசு
நிலப்பரப்பு : 2,12,457 ச. அ. மா.
மக். தொ : 15,00 000
மக். தொ. பெ : 3.0%
மக். வா. எ : ஆண் : 46 பெண் : 48 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 20%
தலைநகர் : மஸ்கட்
மொழி: அரபிக்
நாணயம் : ரியால்—1000 பியாசஸ்

24. இந்தியா (INDIA) —முடியரசு
நிலப்பரப்பு : 31,84, 290 ச. அ. மா.
மக். தொ : 68,38,10,000 (அண்மைக் கணக்கு மிகுந்துள்ளது)
மக். தொ. பெ : 2.0%
மக். வா. எ : ஆண் : 50, பெண் : 49 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 36%
தலைநகர் : தில்லி
மொழி : இந்தி, ஆங்கிலம், மற்றும் 14 தேசிய மொழிகள்.
நாணயம் : உருபா — 100 பைசா

25. நேபால் (NEPAL) — குடியரசு
நிலப்பரப்பு : 14,5,391 ச. அ. மா.
மக். தொ : 16,100,000
மக். தொ. பெ : 2.3%
மக். வா. எ : ஆண் : 43, பெண் : 44 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 20%
தலைநகர் : காட்மாண்டு
மொழி : நேபாலி, இந்திய மொழிகள்
நாணயம் : நேபாலீசு உருபா—உமோஹர்—100 பைசா

(தொடரும்)

பிறப்புகளில் (சகோதரிகளில்) இளையவரான இராச-லட்சுமியாகும்.

- 'கந்தர் சஷ்டிக் கவசம்' என்னும் முருகர் போற்றிப்பாடலை எழுதியவர் வல்லூர் தேவராய சுவாமிகள் ஆவார்.
- ஒரு செயல் கட்டாயம் நடக்கும், நடக்க வேண்டும் என்று மனம் ஆழமாக நினைத்தால், அச்செயல் கட்டாயம் நடக்கும் என்று மனவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்த உண்மைக்கு ஆங்கிலத்தில் (Self Fulfilling Prophecy) என்று பெயர்.
- ஆப்பிரிக்காவில்தாம் மிகுதியான வைரச் சுரங்கங்கள் உள்ளன. உலகில் அதிக அளவில் வைரம் கிடைக்கும் நாடும் அதுதான். தென்னப்பிரிக்கா, போட்சுவானா, அங்கோலா, சியராலியோன், நமைபியா முதலிய நாடுகள் வைரம் கிடைத்தலில் முன்னணியில் உள்ளன.
- சென்னை நகரை அழகுபடுத்த உரு. 1250 கோடியில் தமிழக அரசு ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தை அமைத்துள்ளது.
- நமது பேரண்டத்தில் 30 ஆயிரம் கோடி விண்மீன்கள் உள்ளன என்றும், அவற்றில் குறைந்த அளவில் 10 விழுக்காடு அளவில், அஃதாவது மூவாயிரங்கோடி விண்மீன்கள் நம் கதிரவனைப் போல, நடுத்தர அகவையுள்ள, நடுத்தர அளவுள்ள விண்மீன்களே. அவற்றைச் சுற்றியும் நம் கதிரவன் மண்டிலத்தைப் போல் கோள்கள் உள்ளனவா என்பதை அடுத்த பத்தாண்டிற்குள் கண்டுபிடித்து விடமுடியும் என்று அமெரிக்க அறிவியலாளர்கள் நம்புகின்றனர்.
- "என் எதிரிலுள்ள கம்பத்தில் என்னைத் தூக்கிலிட்டாலும் சரி, துமுக்கியைக் கொண்டு என்னைச் சுட்டாலும் சரி, என் கொள்கைகளை எவருக்கும் எப்பொழுதும் விட்டுக் கொடுக்க மாட்டேன். பிறர் எனக்குக் கொடுக்கின்ற நன்மதிப்புகளை விடக் கொள்கைகளையே நான் பெரிதும் மதிக்கிறேன்" — என்பது அம்பேத்கர் அவர்களின் கூற்று.
- தமிழகத்தில் இன்றைய நிலையில் 25,000 மழலையர் (நர்சரி) பள்ளிகள் உள்ளன, அவற்றில் 14 இலக்கம் ஆண், பெண் குழந்தைகள் படிக்கின்றனர்.
- தமிழக அரசுக்கு ஓராண்டு வருமானம் 7555 கோடி. இதில் அரசு ஊழியர்களுக்குச் சம்பளம், ஓய்வு பெற்றவர்களுக்கு ஊதியம் போன்றவற்றுக்கு மட்டுமே பாதிப் பணத்திற்கு மேல் செலவிடுகிறது.
- உலகிலேயே அதிகக் குழந்தைகள் உள்ள நாடு இந்தியாதான். 5 அகவைக்குட்பட்ட குழந்தைகளும், 18 அகவைக்குட்பட்ட சிறுவர்களும் உலகிலேயே இந்தியாவில்தான் அதிகமாக உள்ளார்களாம்.
- ஓர் இலக்கம் பேருக்கு 170-இலிருந்து, 950 பேர் வரை மனச்சிதைவு நோய்க்கு ஆளாகின்றனர் என்று மருத்துவ அறிஞர்கள் கூறுகின்றனர்.
- உலகம் முழுவதிலும் 10 கோடி மக்கள் அடிமைகளாக உள்ளனர் என்று அமெரிக்கன் நியூஸ் வீக் என்னும் இதழ் விளக்கப்படுத்திக் கூறியுள்ளது.
- பிரிட்டனின் பணக்காரர்களில் முதலாவது இடத்தைப் பெறுபவர் அந்நாட்டின் பேரரசியான எலிசபெத் அம்மையார் ஆவர்.

பப்பாளிப் பழம்!

பப்பாளிப் பழத்தில் அதிக அளவு 'விட்டமின்' சாரங்கள் (சத்துகள்) உள்ளன; தாது உப்புகள் உள்ளன; பொதுவான அளவுள்ள ஒரு பப்பாளிப் பழத்திலுள்ள ஊட்டச் சாரங்கள், நான்கு அரத்திப் (ஆப்பிள்) பழங்களிலிருந்து பெறக்கூடிய சாரங்களுக்குச் சமமானவை;

இதிலுள்ள சாரங்கள் விட்டமின் 'ஏ', 'சி', பி2, மற்றும் இரும்பு, மணி, சுண்ணும்பு, மாவு, கொழுப்பு, புரதம் முதலிய சாரங்கள் மிகுதியானவை.

இதில் சூடு மிகுந்திருப்பதாகக் கூறுவார்கள். ஆனால் இதன் காய்களில் ஒரு வகைக் காரநீர் உள்ளதால் உண்பவர்களுக்கு அது சூட்டை உண்டாக்குகிறது. பழம் சூடு இல்லை; காய்களையும் பிற காய்களைப் போல் சமைத்து உண்ணலாம்; சர்க்கரை நோய் உள்ளவர்களுக்குக் கூட பப்பாளிப்பழம் மருத்துவர்களால் பரிந்துரைக்கப் பெறுகிறது; ஏனெனில் இதிலுள்ள சர்க்கரை குருதியில் நேரிடையாகக் கலப்பதில்லை.

பப்பாளிப்பழம் ஒரு சிறந்த உணவாகும். இதிலுள்ள சாரங்கள் செரிமான ஆற்றலை அதிகரிக்கும்; அது குடலிலுள்ள புழுக்களை அழிக்கும்; மூல நோய், மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு இப்பழம் மிகச் சிறந்த மருந்து. இப்பழச்சாரம் கல்லீரல், கணையம் (மண்ணீரல்) இவற்றில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கப் பயன்படுகிறது. இது தவிர சிறுநீரக நோய்களுக்கும் இது சிறந்த மருந்து. இரைப்பையில் உண்டாகும் கட்டிகளைக் கரைக்கவும்; பெண்களிடம் உண்டாகும் மலட்டுத் தன்மையை நீக்கவும் இது பயன்படுகிறது;

பப்பாளிப் பழத்திலிருந்து சாறு, பழக்குலை, சாறு தோய்வு முதலியவற்றைச் செய்யலாம்; பப்பாளிக் காய்களை வற்றல் செய்து பயன்படுத்தலாம்; சமையலும் செய்யலாம்; இறைச்சி செய்யும்போது, பப்பாளிக்காயின் துண்டுகள் சிலவற்றை அத்துடன் இட்டுக் குழம்பு செய்தால், கறித்துண்டுகள் பஞ்சுபோல் வெந்துவிடும்;

பப்பாளிக் காய்களிலிருந்து கிடைக்கும் பாலை வடித்தெடுத்துக் காய வைத்துப் பொடியாக்கிப் 'பப்பெயின்' என்னும் பப்பாளித் தூளைச் செய்கிறார்கள். இப் பொடி செரிமான மாத்திரைகளில் சேர்க்கப்படுவதோடு, சொறி, சிரங்கு மற்றும் முகப்பருக்களைக் குணமாக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. முகத்தில் பரு உள்ளவர்கள் பப்பாளிப் பழத்தின் சதைப் பகுதியை முகத்தில் தேய்த்து உலர விட்டு அடிக்கடி கழுவி வந்தால் பருக்கள் நீங்கி முகம் பளபளப்புடன் விளங்கும்; பப்பாளிப் பொடி முகத்தில் பூசப்படும் மணப்பொருள்களுடன் கலக்கப்படுகிறது;

பப்பாளித் தூள் மதுக்குடிப்புகளைத் தூய்மை செய்யவும், தோல் பதனிடு செய்யவும், பற்பசை செய்யவும், தாள்கள், புகைப்படத் தொழில், நெய் வண்ணங்கள் செய்யவும் பயன்படுகிறது. ஆடைகளில் உள்ள கறையைப் போக்கவும் இத்தூள் பயன்படுகிறது; இந்த வகைகளில் இ'து ஓர் ஏற்றுமதிப் பொருளாகவும் பயன்படுகிறது. மற்ற பழங்களைப் போலல்லாமல் பப்பாளி ஆண்டு முழுவதும் விளைவைத் தருகின்றது. ஒரு மரத்திலிருந்து இரண்டரை ஆண்டுக் காலத்தில் நூறு பழங்கள் கிடைக்கிறது;

— நன்றி. தினமணி — 15-9-91

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005; (தமிழகம்)